## Hon’ble High Court of Madras convicted the Trap case Accused Tr.K.Chinnusamy, Deputy Chief Inspector of Boiler, PWD, Adyar, Chennai

On 18.07.2003, on the complaint of one Tr.Mohan, Customer Development Manager, M/s.Rasi Electrodes Ltd. Raja Annamalai Road Chennai -84, a trap case was registered in Cr.No.7/2003/AC/CC-II u/s 7 r/w 13(2), 13(1)(d) of PC Act, 1988 against Tr.K.Chinnusamy, the then Dy. Chief Inspector of Boiler, PWD, Adyar, Chennai who had official capacity to issue requalification Certificate for the welders had demanded Rs.2000/- for above said certificate in favour of an employee of the said company Tr.K.Krishnarajan, who underwent a test before the accused on 17.07.2003.In the trap laid against the accused, he was caught red-handed while demandedand accepting the bribe money Rs.2,000/- from the complainant. The tainted bribe money was also recovered from the accused in the presence of official witnesses. On completion of investigation, the case was charge sheeted against the accused u/s.7 and 13(2) r/w.13(1)(d). The case was tried before the Spl. Court for PC Act, Cases, Chennai and it ended in acquittal on 23.04.2014 for lack of evidences. Against this acquittal, an appeal was filed in Crl.A.646/2014 before Hon'ble High of Madras and on 02.03.2023, Hon’ble Justice Mr.Velmurugan convicted the accused for 6 months Rigorous Imprisonment and with fine Rs.10,000/- u/s 7 and concurrently 1 year Rigorous Imprisonment and with fine Rs.10,000/- u/s.13(2) & 13(1)(d) of the Act. The accused Tr.Chinnusamy was arrested and imprisoned in Central Prison, Puzhal, Chennai in early hours of today (03.03.2023).

**கனம் நீதியரசர், உயர்நீதிமன்றம், சென்னைஅவர்கள் பொறிவைப்பு நடவடிக்கைவழக்கில் குற்றவாளிதிரு.சின்னுச்சாமி, கொதிகலன் முதன்மைஆய்வாளர், பொதுப்பணித்துறை, அடையாறு, சென்னைஅவர்களுக்குவழங்கியதண்டனைவிவரம்**

கடந்த 18.07.2003ம் தேதிதிரு.மோகன், வாடிக்கையாளர் மேம்பாட்டுமேலாளர், M/s. Rasi Electorodes நிறுவனம், ராஜா அண்ணாமலை சாலை, சென்னை - 84 என்பவர் தனது கம்பெனியில் வெல்டராக பணிபுரியும் திரு.கிருஷ்ணராஜன் என்பவரின் தகுதிச்சான்றிதழை புதுப்பிப்பதற்காக எதிரி திரு.சின்னுச்சாமி, கொதிகலன் தன்மை ஆய்வாளர், பொதுப்பணித்துறை, அடையாறு, சென்னை முன்னிலையில் 17.07.2003 அன்று பயிற்சி எடுத்துக் கொண்டதாகவும், அந்த பயிற்சிக்கான தகுதிச்சான்றிதழை வழங்குவதற்கு அதிகாரமுள்ள மேற்படி எதிரி ரூ.2,000/- லஞ்சம் கேட்டதாககொடுத்த புகாரின் அடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவில் குற்றஎண்.07/AC/2003/CC-II u/s 7, 13(2) r/w 13(1) (d) of PC Act, 1988பிரிவுகளில் வழக்குபதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையில், 18.07.2003 தேதியன்று பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, அதில் எதிரிபுகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.2,000/-த்தை கேட்டு பெற்றுக்கொண்ட போது கையும் களவுமாக கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து சாட்சிகளின் முன்னிலையில் ரசாயனம் தடவப்பட்ட லஞ்சப்பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இந்தவழக்கில் விசாரணை முடிவுற்று எதிரி மீது சட்டப்பிரிவு 7, 13(2) r/w 13(1) (d) of PC Act, 1988-ன் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டு சென்னை சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடத்தப்பட்டு 23.04.2014 அன்று எதிரி மீது போதிய ஆதாரங்கள் இல்லை என்று எதிரி வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டார். இந்த தீர்ப்பிற்கு எதிராகஊழல் தடுப்பு மற்றும் லஞ்சஒழிப்புத்துறை சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் Crl.A.646/2014ன் கீழ் மேல்முறையீடுசெய்யப்பட்டு, இருதரப்பு விவாதங்களுக்கு பிறகு 02.03.2023 அன்று இவ்வழக்கின் விசாரணை முடிவுற்று

கனம் திரு.வேல்முருகன், நீதியரசர், உயர்நீதிமன்றம் அவர்கள் எதிரி மீது சட்டப்பிரிவு 7of PC Act-ன் கீழ் 6 மாத கடுங்காவல் தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும், சட்டப்பிரிவு 13(2) & 13(1) (d) of PC Act-ன் கீழ் 1 வருட கடுங்காவல் தண்டனையுடன் ரூ.10,000/- அபராதமும் விதித்து எதிரி மீது இவ்விரு தண்டனைகளையும் சமகாலத்தில் நிறைவேற்ற வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளார். எதிரி திரு.சின்னுச்சாமி கைது செய்யப்பட்டு இன்று (03.03.2023) அதிகாலை புழல் மத்தியசிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.